"உயிர்ப்பும் உயிரும் நானே - என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"



# அமரர்

# திரு. அருணாசலம் யேசுதாசன்

## அவர்களின்

## சிவபதப்பேறு குறித்த
## நினைவுமலர்

**14.03.2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குமுழமுனை பல்லவராயன் கட்டை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்

# திரு. அருணாசலம் யேசுதாசன்

# அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவுமலர்

## 14.03.2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

தந்தையே! எம்மை
அன்புடன் வளர்த்து
ஆதரவு அளித்திட்ட எம் தெய்வமே!
உன்னையே நம்பி
உலகினில் வாழ்ந்து
உயர்நிலை அடைந்திட்டோமென்று
என்றுமே உந்தன்
தாழினை தொழுது - நாம்
பழுதிலா வாழ்வை பாரினில் தொடர
வழிகாட்டியாய் நின்று
அருளாசி தந்திடும் - தந்தையே!
நின் பாதக் கமலங்கட்கு
படைக்கின்றோம் இம் மலரை
சமர்ப்பணமாக.

**இங்ஙனம்**
**பிள்ளைகள்,**
**திரு.திருமதி. பிரபாகரன்**
**சந்திரிக்கா குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கிறிஸ்துவே விதைப்பவர்
ஆண்டவர் வார்த்தையே விதையாகும்
அவரைக் கண்டடையும்
என்றென்றும் வாழ்வார்கள்”

அன்னை மடியில்

18 - 04 - 1954

ஆண்டவன் திருவடியில்

14 - 03 - 2006



# அமரர்

# திரு. அருணாசலம் யேசுதாசன்

அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர்.
# திரு. அருணாசலம் யேசுதாசன்
## அவர்களின்
## பாதம் பதிவுகள்

மானம் மிக்க மானுட வாழ்வின் சிறப்பை உணர்ந்து தாம் மறையும் வரை யாருக்கும் துன்பம் விளைவிக்காது யாரையும் பகைக்காது அனைவரும் போற்றும் உத்தமராய் திகழ்ந்தவர் பெருமதிப்பிற்குரிய

அமரர். திரு. அருணாசலம் யேசுதாசன் அவர்கள்.

நிலவளம், கடல்வளம், பனைவளம் அனைத்திலும் சிறந்து விளங்கும் வன்னி என்ற வளமிகு பூமியிலே ஆ இனம் பெருகிட செந்நெல் குவிந்திடும். புகழுடைய சீலர்கள் வாழும் புனித அந்தோனியாரை பாதுகாவலராக கொண்டமைந்திருக்கும் குமுழமுனைப் பகுதியிலே, அமரர்களான அருணாசலம் அன்னம்மா தம்பதிகளின் மூன்றாவது செல்வ புதல்வனாக அருணாசலம் யேசுதாசன் 1954.04.18 இப்பாரில் கால் பதித்தார்.

அன்பினால் அரவணைத்து உள்ளம் மகிழ உடன் பிறப்புக்களான மூத்த அண்ணன் பொன்னுத்துரை (மரியாம்பிள்ளை) சின்ன அண்ணன் அந்தோனியப்பு (தபால் திணைக்கள உத்தியோகத்தர்) ஆகியோருடன் மூன்றாவது புதல்வனாக அமரரும், வில்லியம்மா, இருதயநாயகி ஆகியோருடன் விக்ரோறியா ஆசிரியரும் இவரது உடன் பிறப்புக்கள் ஆவார்.

பள்ளிப் பருவத்தில் கிளி குமுழமுனை அ/த/க பாடசாலைதான் சென்று துள்ளி விளையாடி துயர் மறந்து அள்ளி அணைத்திட்ட பெற்றோர் சொல் கேட்டு அண்ணன்மார் வழி நிற்க வலம் வந்தார் வையகத்தில்.

வாலிப வயததனில் உற்ற சோதரருக்கு உறுதியான தோற்றத்துடனும் உரமான உள்ளத்துடனும் உதவி பல புரிந்து நின்றார். இல்லறப்படகில் இணைந்திட விரும்பி உறவினர் திரு.திருமதி.இம்மானுவேல் பத்திலோமை தம்பதிகளின் மூன்றாவது செல்வப் புதல்வியும் மணாளனுக்கேற்ற மங்கையுமான வரவணிக்கா என்பவரை மணந்து கொண்டார் நல்லறம் படைக்க துணையாய் கரம் பற்றி இன்பங்கள் பெற்றே இணைந்தே வாழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளம் மகிழ இருவரும் விரும்பிக் கூட வணங்கிய இறைவனருளால் நான்கு செல்வங்கள் ஒன்றுக்கொன்று துணையாக மூத்தமகள் சந்திரிக்கா (ஆசிரியை) மூத்த மகன் ஜெகதாஸ் (டொன்பொஸ்கோ நீர்கொழும்பு) இளையமகள் நாகினி (யாழ்பல்கலைக்கழகம்) லொசிங்ரன் (டொன்பொஸ்கோ நீர்கொழும்பு) ஆகியோரை அவனியிலே தோற்று வித்தார்.

மனைவியோடு பிள்ளைகள் மகிழ்ந்திட மனைவளம் பெருக்கி பல்கலைக்கழக மெனும் பாதையை வகுத்து நாற்றிசையும் நான்கு செல்வங்களையும் விடுதிகளில் வாழவிட்டு கருத்துடனே வாழ்வதற்கு கல்வியது அவசியம் என்றுணர்த்தி கல்விதனை கல்வியற்கல்லூரியிலும் தொழிநுட்பக்கல்லூரியிலும் பல்கலைக்கழகத்திலும் பெற்றிடவே உழைத்து நின்றார் அயராது தினம் தினமே!

இவ்வாறு இருக்கையில் இளைய மகளின் இனம்காண நோய்கண்டு யாவருமே பதறிநிற்க அன்பு மனைவியினை நாச்சிக்குடா சந்தியதில் பாங்குடனே பாசமகளை பார்த்து வர அனுப்பி வைத்தார் கொழும்பிற்கு அப்போதுதான் வன்னியில் பேரவல இடப்பெயர்வு 2008.07.21 ஆரம்பமாகியது அமரருக்க அப்போது அவர் குடும்பத்தில் உடனிருந்தார் கடைசிமகன் லொசியுடன் குமுழமுனையின் பகுதியிலிருந்து வன்னேரி ஆனைவிழுந்தான் நோக்கி சென்று கொடுமையான அதிர்வுகளால் இருக்க முடியாது போகையில் கோணாவில் நோக்கி சென்று மாமன் மாமி சகோதரர்கள் மைத்துனர்கள்! மற்றும் உறவினருடன் கூடி மீண்டும் தர்மபுரம் கட்டைக்காடுதனில் மூன்று மாத காலத்தையும் கிளி/ மாவட்ட வாழ்வு விட்டு முல்லை மண்ணில் மயில் வாகனபுரத்தில் கால் பதித்து ஆங்காங்கே சிறு குடிசைகளை அமைத்து பல துன்பங்களை இருவருமாய் அனுபவித்து சொல்லவந்த செய்திகளையும் சொல்ல முடியாத வேதனைகளையும் இடைக்கிடையே மக்களுடன் கதைத்துக் கொண்டும் பல தியாகங்களை தியானங்களாக்கி வண்ணமாய் முறையே மூங்கிலாறு உடையார்கட்டு சுதந்திரபுரம் ஊடாக இரணைப்பாலை சென்று மாத்தளனில் குடியிருக்கையில் தொலைபேசி அழைப்பதுவும் மனைவி, மக்களிற்காய் இனியான் அடுத்து வரும் மக்களுடன் வந்து சேர்ந்திடுவோம் என்றுரைத்த அடுத்த ஐந்து நாளின் பின்னே தான் வாழ்ந்த வாழ்க்கை போதுமென நினைத்து விதைத்தவன் அறுவடைஎனும் கதையாக தனது 54ஆவது அகவையுடன் வாழ்க்கை முற்றுப் பெற யார் தான் எண்ணினார் இல்லை. அன்புடன் பழகிய உறவுகள் சுற்றத்தை தவிக்கவிட்டு 2008.03.14 அன்று தன் அன்புத்தந்தை தாயிடமாய் இறையடி சேர்ந்தார். இவர் விட்டு சென்ற எச்சங்கள் படிவங்களாக பரவட்டும் ஒளியாய் பிரகாசிக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு மனையாரின் நெஞ்சம் நொந்தழுகிறதே......

ஆறாது ஆண்டுகள் பல கடந்தாலும் என்னவரே
மாறாது உம்மிருப்பு எம்மை விட்டு
உயிருக்கு உயிரான என்னவரின் இழப்பு
ஈடு செய்ய முடியாத தொன்று

இருபத்தாறு ஆண்டுகள் இல்லறத்தில் இணைந்து
இன்பமும் துன்பமும் ஒன்றாக் கொண்டோமே
நான்கு பிள்ளைச் செல்வமதை பெற்றெடுத்து - இன்று
அன்புக்கணவனை இழந்து துடியாய் துடிக்கிறேனே.

குடும்பத்தலைவனாய் அன்புக் கணவனாய்
பாசமிகு தந்தையாய், சிறந்த பண்பாளனாய்
தியாக செம்மலையாய் விளங்கி நின்றீர்....
இன்று கண்ணீர் வடிக்கின்றேன் - என்
இதயம் கனக்கிறதே.

ஆபத்தில் அரணாயிருப்பீர் சோகத்தில் சோதரனாயிருப்பீர்
எல்லோருக்கும் எல்லாமாயிருந்து
இல்லை யென்று சொல்லமட்டீர் ஐயா
இன்று நீர் எம்மோடு இல்லையையா.

உடல் பிரிந்தாலும் உள்ளத்தால் பிரிவில்லை
உயிர் துறந்தாலும் என் உயிராய் வாழ்கின்றீர்
மண்ணில் மறைந்து நின்றாலும் எம் நெஞ்சில்
நிறைந்து இருக்கின்றீர்
குடும்பம் தாங்கிய தூணாய் இருந்தீர்
இன்று நீ எம்மோடு இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தமகள் கல்வியியற் கல்லூரி தனிலே
ஆசிரியர் நாமம் சூட
மூத்தமகன் டொன்பொஸ்கோ நீர் கொழும்பதுவாம்
தொழிற் பயிற்சி பெற்றவராய்
முயற்சி செய்து வளர்த்து விட்டீர் - நீரில்லைஐயா.

இளைய மகள் யாழ் பல்கலை கழகத்தில்
இரண்ட வரு மாணவியாய் - நோயின்றி
இரட்டிப்பு மகிழ்சியை பார்க்கவில்லை ஐயா
படிக்க வென்றேநாம் பிரிந்தோம் - நான்கு வருடங்கள்
உங்கள் முன் கூட கட்டவில்லை அப்பா
கதறும் குரல் கேட்கலையா?

காலத்தின் கோலமதாய் 8மாதங்கள் பிரிந்துரிக்க
நிற்பந்தித்தது
தொடர்ச்சியான பிரிவு வந்ததே என்செய்வேன் - ராகனே.
கடைக் குட்டியுடன் உமைவிட்டு - வந்தேனே கடைசியிலே
தவியாய் தவிக்கவிட்டு செல்வதற்கா?

ஆ இனம் அலையுதையா ஆயன் இல்லையென
கால் தடங்கள் தெரிகிறதே உம் நினைவே எந்தனுக்கு
ஆடிய மேடையும் அவையோரை கவர்ந்திருக்கும்
நடிகனை காணலையாம் தேடுகிறார்கள்.
நண்பர் கூட்டம் உம்மையே சூழ்ந்து கொள்ளம்
சுற்றத்தாரும் நீர் இல்லையென் கதறியே
புலம்புகிறார்கள்
இன்று எம்மோடு நீர் இல்லையென.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓராண்டு காலம் ஓடி விட்டாலும்
ஒருநாள் என்றே உணர்வு
பிரிவின் துயரம் வாட்டி வதைக்கிறது
கணவனுக்கோர் இலக்கணமாய்
குடும்பகுலவிளக்காய் இருந்துவிட்டு
அணைந்த தீபமாய் மறைந்து போய் விட்டீர் ஐயா
எங்கே இருக்கின்றீர்?

முத்தமகள் கரைசேர்ந்திடவே சம்மதம் தெரிவித்தீர்
வருவோம் வருவோம் என
தொலைபேசி வழி கூறிநின்று
ஏமாற்றி சென்ற தேனோ என்னவரே
விண்ணின் மகிமையில் நிறை வேயுள்ளார்
என்பது ஒன்றே - ஆறுதல் தருகின்றது.

இழப்பு செய்தி இதயத்தை பிளக்கிறதே
நீர் அறிவிரா - தெய்வமே
இன்னும் என் இதயம் கேட்டது ஒன்றே
நான் கேட்ட செய்தி பொய்காதென்று
இறைவனே ஏனக்கேன் இன்நிலை
தயாக ஓர் வரம் தாராய்......

அன்பு மனையாள்
யே. வரவணிக்கா

"கிறிஸ்துவே விதைப்பவர்
ஆண்டவர் வார்த்தையே விதையாகும்
அவரைக் கண்டடையும் எவரும்
என்றென்றும் வாழ்வார்கள்"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அன்பு தெய்வம் எங்கே இருக்கிறீர்கள்?

அப்பா அப்பா நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?
ஒருதடவை இருதடவை பலதடவை கூப்பிட்டாலும்
அப்பா குரல் கேட்கவில்லை.
அப்பா அப்பா இனி எங்கே தேடி வர சொல்லுறீர்கள்

அன்பால் எமைத்தாங்கி அறிவையே உணவாயூட்டி நாம்
கல்வி பெற உங்களையே உரமாயீட்டி
அசையாய் எமை வளர்த்து ஆளாக்கி பார்த்தீரல்ல - நாங்கள்
மேனிலை கண்டு வாழ வேணுமென்று ஆசைகொண்டு
காணும் மண் துன்பமெல்லாம் காணவே வேண்டாமென்று
கடைக்குட்டியுடன் இறுதிக்காலம் கண்டீர்களல்லோ
அப்பா இனி யெங்கே உம் குரலை நாம் கேட்போம்.

உயர்வினை காணவென்று ஏணியாய் நீங்கள் இருந்தீர்கள்
அம்மாவுடன் நாங்களுமே தேடியே அலைகின்றோம்
நோயுற்று உங்கள் துன்பவேதனை தான் கண்டோமில்லை
பாயினிற் படுத்திருக்க பக்கத்திலிருந்து பார்த்தோமில்லை
பணிவிடை செய்யவில்லை பாவிநாம் ஆனோமப்பா
மனதிலே வேதனைதான் வாழ்விலே தீராதவை
அப்பா அப்பா இனி எங்கே உம்குரலை நாம் கேட்போம்.

அன்பாலும் கண்டிப்பாலும் எமை நீங்கள் வளர்த்துவிட்டு
அருள் பெற்ற உள்ளங்களை உந்தனுக்காய் உதவவிட்டு
பல இடங்கள் அனுப்பிவைத்தீர் பலகல்வி நாம் பெறவே
விடுதிகளிலிருந்து தாம் விடுகையில் வரும் போது
கூலுணவு விருப்பமென விதம்விதமாய் எனக்களித்து
உவப்புடன் ஊட்டிவிடும் மகிழும் தந்தையல்லோ - நீங்கள்
அப்பா அப்பா உங்கள் சிரித்த முகம் தனம் ஒருதரம் பார்க்கலையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பயண வேளைகளில் கூடவே துணையிருப்பீர் - பிள்ளைகள்
நாம் வந்துவிட்டால் சந்தோசத்திற்காகவே இல்லை
எமக்காக நீங்கள் பட்டதுன்பம் கொஞ்சமில்லை - கடமைதானும்
செய்தோமில்லை - எங்கள் மனம் ஆறுதில்லை
உங்கள் உற்றார் உறவினருடன் உறவாடுகிறோன்
உங்கள் அப்பா என ஒவ்வொருவரும் கதைகூற - நாம்
கேட்கும் நிலையாகி போனதப்பா இறுதியிலே
அப்பா அப்பா எங்கே உம் அழகிய உருவம் காண்போம்?

நீங்கள் தேடி வைத்தோர் பலபேரைக் காண்கின்றேன் - அப்பா
உங்கள் கதை கூறயாருமில்லை - தொலைபேசி
அழைப்பிலும் உங்களை கூறிக் கதறும் குரல்கள் ஏராளம்
இப்பதான் புரிகிறது உங்கள் பலரிடம் உண்டு என்று
அப்பா அப்பா எப்போ உமை காண்போம்
ஓராண்டு ஆனாலென்ன நூற்றாண்டு வந்தாலென்ன
காத்திருப்போம் எம் தெய்வம் வருவீர்களென

**அன்பு மகள்**
**சந்திரிக்கா (ஆசிரியை)**
**(கிளி/ முழங்காவில் மகாவித்தியாலயம்)**

**"உயிர்ப்பும் உயிரும் நானே - என்னில்**
**விசுவாசம் கொள்வபன் இறப்பினும் வாழ்வான்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்த மகளின் இதயக்குமுறல்

அன்புடனே வந்தோரை உபசரித்து
ஆதரவாக இனிமையாக பேசி
புன்சிரிப்புடனே முகமலர்ந்து முகம் கோணாது
சுறுசுறுப்புடன் விரைந்து நின்று
காரியங்களை செய்துமுடிக்கும் என் அப்பாவே
உங்களை நான் எப்போ காண்பேன்.

I

எவ்வித உதவியுமின்றி தனிமையுடன்
எல்லா வேலைகளையும் செய்திடும் - என் அப்பாவே
உங்கள் வதனமதை எப்போ - காண்பேன்
இறுதியில் தனியே சுமைகளை சுகமாக்கி
உடல் களைப்புற்றாலும் விடாமுயற்சியுடன்
உம் பணியை செய்தீர் - நீர் தனியே

II

வேதனைகளையெல்லாம் அனுபவித்தீர்
உம்மோடு சேர்ந்து அனுபவிக்க - நாம் இல்லை
நீர் வருவீர் என பார்த்தோம்
ஆவலுடன் உம் கதைகளைக் கேட்க
கடைசியில் உம் கதைகூறயாருமில்லையே
இப்போ நாம் தவிக்கின்றோம் உம்மை எண்ணி

III

உம் தூய எண்ணமும் எளிமையான வாழ்வும்
உதவி செய்யவேண்டும் என்ற சிந்தையும்
உம் உடல் வலிமையையும்
நோயற்ற உம் உறுதியையும்
எங்கே நாம் தேடுவோம் அப்பா
சொல்வீங்களா........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV

தேவனைக் கண்டால் சிரம்பணிந்து
கடவுளே உயிரென்று
தினமும் ஆலயம் சென்றிடும் - உன்
நம்பிக்கையையே கடவுள் பொறுக்காமல்
உம்மையும் தன்னுடன் இணைத்து கொண்டது ஏன்
தன்னுடன் வாழவா - அப்பா
உம் நம்பிக்கை வீண்போகாது கவலைப்படாதீர்
கடவுள் உம்மோடு ,நித்தியம் தருவார் நிச்சயம்

V

கடைசியாக உம் குரலினைக் கேட்க
சந்தர்ப்பம்கொடுத்தாயோ - என்
சுகம் தனை விசாரித்தாயே இப்போ
உன் சுகம் தனைக் கேட்க யாருள்ளார்
அப்பாவின் குரலைக்கேட்டு ஈடில்லா

மகிழ்ச்சி கொண்டேன்
ஆனந்தக் கண்ணீர் சொரிந்தேன்
கடைசியில் உன் அனுதாபச் செய்தி கேட்டு
இன்று இதயத்திலிருந்து குமுறி அழுகின்றேன்
இன்னமும் உமை எண்ணி கண்ணீர் வடிக்கின்றேன்.

VI

அப்பா அப்பா என்று அழுது
என்மனம் சேர்ந்து விட்டது
நினைக்கவில்லை உம் இறப்பை
அப்பா உள்ளார் என்ற
துணையுடன் வாழ்கின்றோம்
மறக்கவில்லை உமை நாம்
அப்பாப்போ வருவீர் எமைப்பார்க்க
என் அன்புமுத்தம் என் அப்பாவுக்கே.

**அன்புடன் மகன்**
**ஜெகதாஸ் (ஜீவன்)**
**டொன்பொஸ்கோ (நீர்கொழும்பு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பாவை நான் எங்கே தேடுவது

அப்பா ஓராண்டு கடந்தாலும்
மாறாது உன் நினைவுகள் அப்பா
மறக்க முடியுமா உயிருள்ள வரை உங்களை
அப்பா அப்பா என்று அழைக்கின்றேன்
காணவில்லை உம் குரலினை
எங்கே அப்பா போனீர்கள்!

அன்பும் பண்பும் உடையவராய்
அகிலத்தில் வாழ்ந்து - அயலவர்
நற்பெயரைப்பெற்று
எமை விட்டு போனது ஏனோ உம்மை
தனிய விட்டதுதான் காரணமோ - அப்பா
அயலவர் உறவினர் இருந்தென்ன - உங்களை போன்ற
அப்பாவை எங்கே தேடுவது

எனை நோய் வாட்டிய போதும்
நான் சுகம் பெற்றவுடன்
படிக்கபென பல்கலைக்கழகம் அனுப்பிவிட்டு
படிக்கத்தொடங்கிய 1ம் வருடத்திலே
என் அப்பாவின் கவலைச் செய்தி
என் மனதை சிந்தையில் ஆழ்த்தியதே
படிக்கவோ மனமில்லை உம் ஞாபகம்
அடிக்கடி வாட்டுகிறது அப்பா எங்கே

எனக்காக என் பிள்ளைகள் படிக்க வேண்டும்
எனக்கூறும் உன் வார்த்தைகள் எம்மை
பரிதவிக்க சென்றது ஏனோ
உன் நாமம் உயர்ந்தது ஆனால்
பெருமை பாராட்ட அப்பா இல்லை
எங்கே அப்பா போனீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

O/L பாஸ் பண்ணின போதும்
என் அப்பா மட்டில்லா மகிழ்ச்சியடைந்தார்
A/L பாஸ் பண்ணிய போதும்
பல்கலைக்கழகம் கிடைக்னுமென
என் அப்பா கூறி நின்றார் அதேபோல்
கிடைத்தது இப்போ பல்கலைகழகத்திலே
எனை தவிக்க விட்டு சென்றுவிட்டாயே

நோயின் வடுவிலே நான் இருந்த போதும்
என் அப்பா எனக்காக துடித்தாரல்லோ
என் கண்ணீர் சிந்தினால் அப்பா பொறுத்திடார்
கடவுள் கைவிட்டு விட்டார் என்றும் நான்
கூறும் வார்த்தைகளை மறுத்து
உண்மையை உரைத்தாரே - என்
தெய்வத்தை எப்போ காண்பது

போர் என்ற போர்வைக்குள் - என்
அப்பாவை தனியே தவிக்கவிட்டு
வருவார் என்று எண்ணிக் கொண்டோம் - ஆனால்
காலவன் எமை தனிக்க விட்டான்
அப்பாவைக் கண்டோ 4 வருடங்கள்
அப்பாவின் குரலைக்கேட்டோ 1 வருடங்கள்
பிள்ளையை பார்க்க வருவேன்" என்று
நீர் கூறி நானும் பார்த்தேன்
வந்ததோ உன் கவலைச்செய்தி - எனை
ஏமாற்றி சென்று விட்டாய்.

இறுதியில் உன் அடையாளமுமில்லை
உருவமும் இல்லை ஏன் இப்படி செய்தீர்கள்
வரமாட்டீங்களா? அப்பா - அப்பா
உம் ஞாபகம் வருகின்றது, வாட்டுகின்றது - உம்
மகளிடம் விரைந்து வாருங்கள்
பார்த்துக் கொண்டிருப்பேன்.

அன்புமகள்
ராகினி (காமினி)
யாழ்/ பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுதலுக்காக யாருளார்

அன்புமொழி பேசி என் அருகிலிருந்து
உறவாடி ஆறுதல் வார்த்தை பேசி
உணவையும் ஊட்டி விட்டு
என் உயிருக்காய் உம்மையே
தியாகம் செய்த அப்பாவே
உம்மை எப்படிக் கூறுவேன்!

எளன்னை தனியே தவிக்க விட்டு
ஒரு வார்த்தை கூட பேசாமல்
எங்கு சென்றுவிட்டீரோ என்று நானிருக்க
எனக்கு ஒரு ஏமாற்றத்தை தந்து விட்டு
எங்கு சென்றாயோ அப்பா உமை
எங்கு நான் தேடுவது.

உம் வார்த்தையும் உறுதி
உம் சிந்தையும் உறுதி எல்லாமே எனக்காக
கடைசியாக எனை ஈன்றெடுத்து
கடைசிவரையும் உன்னோடு வைத்து
என்னை தனியே விட்டுச் செல்ல
எப்படி உமக்கு மனம் வந்தது - உமக்கு
எங்கு நான் செல்வேன்!

உன் அருகில் நானிருந்தும் - என்னை
காணாமல் சென்றுவிட்டாயே அப்பா
உம்மை நானும் தேடினேன் - உம்மை
காண முடியவில்லை நான்
அநாதையாகிவிட்டேன் ஆறுதலுக்கு
யாருள்ளார் உம்மை எப்போ காண்பேன்.

ஆசை மகன்
லொசிங்ரன்
டொன்பொஸ்கோ (நீர்கொழும்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகனார் இதயக் குமுறல்

மாமா உங்களை நான் பார்த்துள்ளேன் பேசியுள்ளேன்
மருமகனே என நீங்கள் அணைக்கு முன்னே
உயிர் பிரிந்த செய்தி கேட்டு
அதிர்ந்து போனேன்
மாமாவை இனிப் பார்க்க முடியாதா?
ஏக்கம் இன்னும் தீரவில்லை.

ஓராண்டு ஓடி மறைந்தாலும் - உங்கள்
உயர்வான, அன்பான பண்புகளை - ஊரிலே
உங்கள் உற்றார் உறவுகள் சொல்லக்கேட்டு
நான் என்ன பாவம் செய்தேன் கூடியிருக்க கொடுத்து
வைக்கவில்லை நொந்து கொண்டேன்
உங்கள் ஆன்ம சாந்திக்காக வேண்டுகிறேன்.

**மருமகன்**
**தி.பிரபாகரன்**

## பெரியண்ணன் இதயத்திலிருந்து

கண்ணெதிரே நின்று கதைபல கேட்டு
கணப் பொழுதில் நான் போய் மறையுமுன்
உன் கதை முடிந்து போன துயர் செய்தி யொன்று
பரவியே சூழ்ந்து வந்ததை கேட்டுமே
யான் இங்கு பதறியே கண்ணீர் வடிக்கின்றேன்
என்அருமை ராசுவே!

சிறுவயது முதல் இன்று வரை ஒரு சொல் கூட தட்டாது
அண்ணனுக்குரிய இடத்தை கொடுத்து வந்தாய்
ஒருகிழமை தனும் எனை காணவில்லை யென்றால்
தேடியே வந்திடுவாய் நானும் அப்படியே
உன் உறவை இனி நான் எங்கே தேடுவது
என்அருமை ராசுவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடினாலும் கிடைப்பாயா? எங்கே இருக்கிறாய்?
ஐயா உன் படத்தை காணும் போ தெல்லாம்
நெஞ்சு பொறுக்கவில்லையே தாங்குதில்லையே?
உன் மனைவி பிள்ளைகளை காணும் போது
உன் நினைப்பே எந்தனுக்கு
வெளியே கூற முடியவில்லையே
என் அருமை ராசுவே.

சித்தப்பா எங்கையப்பா என் பிள்ரளைகள் - தூர தேசம்
நின்று புலம்புகின்றார்கள் என்னால் எதுவும் கூற
முடியவில்லையே உன் இழப்பை தாங்க முடிய வில்லையே
என் அருமை சகோதரனே உன் இடத்தை
யார் தான் இனி தருவார்?
என் அருமை ராசுவே.

**அன்பு சோதரன்**
**மரியாம் பிள்ளை**
**(பொன்னுத்துரை)**

## சின்னண்ணன் இதயக் குமுறல்

ராசன் ராசன் என உனைத்தேடி நான் வருவேன்
இனி எங்கு நான் செல்வேன் உனைக்காண
அன்பாய் ஆதரிப்பாய் அண்ணன் என - உன்
முகம் காண தவிக்கின்றேன் நீ அறியாய்.

அண்ணன் தம்பி உடையான் படைக்கஞ்ஞானென
நீயிருக்கையிலே நானொரு துன்பம் தனும் கொண்டதில்லை
நீயில்லா இவ்வோராண்டு எப்படித்தான் வந்ததுவே - யான்
நிம்மதியை தான் இழந்தேன் உன்னிடமே

சின்னண்ண சின்னண்ண அன்புடனே அழைப்பாயே
உன்னிழப்பின் செய்தியதால் உருக்குலைந்துநிற்கிறேனே
உடன் பிறப்பின் உயிரிழப்பு பொறுக்குதில்லை
நமைபிரிந்து எப்படித்தான் சென்றாயோ?

**பாசமிகு சோதரன்**
**அந்தோனியப்பு (பாலசிங்கம்)**
**(தபால்திணைக்கள உத்தியோகத்தர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒருபோதும் உனை மறவோம் (மூத்த தங்கை புலம்பல்)

குறுகிய காலம் தான் நான் உன்னன்
கைவிட்டேன் ஆனாலும் மிகுந்த இரக்கத்தோடு
உனை சேர்த்துக் கொண்உள்
ஆயினும் முடிவில்லா அன்போடு இரங்குவேன்

மாணிக்கச் சூரே கலன் விளக்கே
நல்லறிவு புகடிய மரகதமே
நாமெங்கிருந்தாலும் தேடிவந்து
உம் திருமுகத்தை கட்டிச் செல்வீரே!
உம் புன்னகைமலரும் உம் வதனத்தை
எப்போது காண்போம்!

உடன் பிறப்பே உத்தமரே
உன்னை இன்று பிரிந்தநாம் படும் வேதனை
ஓராண்டான லென்ன ஒருபோதும்
உனை மறவோம்.

**அன்புச்சகோதரி**
**வில்லியம்மா**

## 2வது தங்கை காணிக்கையின் மனதில் மலர்ந்தவை

அன்புக்கு இலக்கணமாக அண்ணாய்
அண்ணா வென்ற பாசத்துடனும்
தங்கை என்ற நேசத்துடனும்
இவை தானே நாம் கொண்ட
சுவாசமாக வாழ்ந்து வந்தோமே.

நீ எமை விட்டு பிரிந்து செல்ல
போவது தெரிந்தோ
என்னுடனும் என் குடும்பத்துடனும்
ஒன்றாய் கலந்து அன்பாய் திகழ்ந்தீர்
அன்றும் இன்றும் என்றும் உன்
அன்பு கொண்ட உள்ளத்தை
எண்ணிக் கலங்கி நிற்கும் தங்கையின் காணிக்கை.

**பாசமிகுதங்கை**
**காணிக்கை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசை அண்ணாவிற்கு

கிளிக்குஞ்சு என்று எனை அழைக்கும்குரல் என்றும்
என் காதில் ஒலுலிக்கிறது - அண்ணாகுஞ்சு
மாமா உனைக்காணாது என்மகன்
எங்கு எனக் கேட்கின்றான் - நாள்தோறும்

உங்கள் வழி நடக்கும் என் கணவரும்
உங்கள் இழந்து தவிக்கின்றார்
ஆசை அண்ணாவே எப்போ உங்கள் குரல் கேட்போம்
உங்கள் முகம் காண்போம் நாம்?

நாத்தனை
~~அன்புத்தங்கை~~
கிளிக்குஞ்சு

## அன்பு மாமி மாமா புலம்பல்

மலர்ந்த உங்கள் முகம் காண மலர்ந்திடுமே அதிகாலை
மறைந்த முகம் தேடுகின்றோம் மருமகனே நீர் எங்கு சென்றீர்
கலங்கரை விளக்கம் நீர் கள்ளமில்லா உறவும் நீர்
கலங்கி நாம் கதறியழ காலனுமை அழைத்தனனோ
அவலத்தால் துடிக்கின்றோம் அனைத்தையும் நாமிழந்தோம்
மருமகனே மருமகளே உம் வரவை இனி எங்கே காண்போம்.

உம் மனைவி பிள்ளைகளை ஒருகுறைவுகாண விடுவதில்லை
பால் தரும் பசு மாடுகளும் ஆயனின்றி அலையு தய்யா?
அயராது உம் உழைப்பு காலனுக்கும் பொறுக்கவில்லை
ஓராண்டு ஓடி மறைந்ததையா வேதனை தாங்க முடியலைனயான
மருமகனே மருமகனே உம் வரவை இனி எங்கே காண்போம்.

மாமி, மாமா என்றீர் கூறும் அன்பான வார்த்தைகளை
எம் காதில் ஒலிக்காதோ! ஏங்குகின்றோம்
உம் மனைவி வேதனையில் துடிக்கின்றாள்
சொல்ல வார்த்தையில்லை ஆறுதல் கூற நீங்களில்லை
உம் குழந்தைகள் நிலை காண தவியாய் தவிக்கின்றோம்
குவலயத்தில் பிறப்பெடுத்து மருமகளே மீண்டும் வரமாட்டீரோ?
உம் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

பாசமுள்ள
மாமா மாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னம்மா பிள்ளைகள் தவிக்கின்றோம்

சின்னம்மா சின்னம்மா உன்குரல் கேட்காதோ!
பாலும் தேனும் ஊட்டிய கை
உனை காணலையே கோனாதையா
எனைநீ பார்க்காமல் ஒருமாதம் கூட
இருக்க மாட்டாய்
எப்படித்தான் இருக்கிறாயோ!

உடன் பிறவா சோதரனே தம்பியே
ராசண்ணனே,
உனைப் பிரிந்து நாம் படும் வேதனை அறியாயோ
கூடப்பிறவாவிட்டாலும் நீயும்
எம் உடன் பிறப்பே
உன் பொன் சிரிப்பால் எமைக்
காண வாராயோ.

**சின்னம்மா பிள்ளைகள்**

## சித்தப்பா என் செய்வேன்

குஞ்சியென்று எனையழைத்து - வருவீரே
குஞ்சி இன்று தேடுகின்றேன் எங்கையா போனீர்கள்
எனைக்காண வேளைகளில் தேடியே வந்திடுவீர் - உம்
உன் தந்தைக்கு நிகராக என் சொல் தட்டவில்லை
என்னில் நீர் கொண்ட விருப்பா? எப்படி நான் கூற
கடைசிமுகம் காட்டாது காலனவன் செய்த கோலம்
உனைபிரிந்த நாம் ஆறாத்துயர் கொண்டேன்.
பிள்ளைகள் மகள் எங்கே
அண்ணர் எங்கே என்னபதில்
நான் சொல்வேன் ஓர் தெய்வப்பிதவியோ

**சித்தப்பா**
**உயர்திரு ச. பாலசிங்கம்**
**(குமுளமுனை அருள்மிகு**
**ஸ்ரீ முத்துமாரி அம்மன் அர்ச்சகர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் பிறவா அக்காவின் உள்ளக் குமுறல்

அத்தான் அக்கா வென பாசமுடன் அழைப்பாயே
கடித்ததிலும் தொலை பேசியிலும்
எமது நலம் கேட்பாயே
உன் மனைவி பிள்ளைகளை
பார்த்துக் கொள்ளுமாறும்
நன்றியும் கூறி நின்றாயே
உன் இறுதி மடலினிலே
அதுவரையும் புரியலையே
உன் மனைவி பிள்ளைகள் படும் வேதனை
பார்க்க முடியலை ஐயா
நீ சென்ற இடம் தான் தேடி வந்தனரோ.
உன் அத்தானும்.

**இப்படிக்கு**
**முத்திலிங்கம் ராசாத்தி**

## மைத்துனிமார் மனவருத்தம்

பெரியமச்சாள் சின்னமச்சாள் என்று ஆசையுடன்
எமை அழைத்து அன்புடனும் பண்புடனும்
ஆதரவாய் வாழ்ந்தீரே!
பாசமது தளைத்துவர நேசமுடன் வாழ்ந்தோமே
நாமிருக்கு நீங்களின்று நமை விட்டேன் ஓடி விட்டீர்
ஓராண்டு சென்றாலும் உம் நினைவு
எமக்கிருக்கு! உத்தமரே.
சித்தப்பா என அழைத்து நாம் கூறும் கதை கேட்பாய்
உனை நினைத்து புலம்புகின்றோம்
ஏன் எம்மை தவிக்கவிட்டீர்?

**அன்பு மைத்துனிமார்**
**மகேஸ்வரி, எலிசபேத்ராணி.**

**"சீவியத்தில் எங்களை நேசித்தவரே**
**மரண வேளையிலும் எங்களை மறவாதீர்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கே இருக்கிறீர்கள்?

அத்தானே என்றும் ஆசை அத்தானே.

ஆண்டொன்று ஆனதெம் அத்தனுக்கு
ஆறாதுயர் கொண்டு நாமிங்கு
ஆலமரம் அடியோடு விழலாமா?
ஆண்டவனே இதை ஏன் தடுக்கவில்லை.

அன்பொடுக எமையழைத்து - பகிடியாய்
நாலு கதை கதைத்து
உணவளித்து மகிழ்ந்திடுவாய்
இறுதி நாட்களிலும் நாமிருந்தோம் உமக்கருகில் - உம்
இழப்பை நாமறிந்து துடியாய் துடிக்கின்றோம்.

மச்சாளே மச்சாளே ஆசையாய் அழைப்பீரே
ராசநடை நடந்து புன்சிரிப்பை சொரிவீரே
உமை எங்கு நாம் காண்போம் - நீங்கள்
இருக்குமிடம் தெரிந்து கொண்டால்
உங்களையே சூழ்ந்து வருவோம்

**மச்சான்மார், மச்சாள்மார்.**

## சித்தப்பா நீங்கள் எங்கே!

சித்தப்பா சித்தப்பா - எம் சிந்தையை
சிதறடித்து எங்கே சென்றுவிட்டீர்
செய்தி சொன்ன தொலைபேசி - மீண்டும்
ஒலிக்காதோ அது பொய்யென்று
சித்தப்பாவே சின்னச் சித்தப்பாவே.

பிறர் மனதறிந்து செயல்படுவார் எங்கள் சித்தப்பா
கடைசிவார்த்தை பேசும் போதும் எண்பிள்ளைகள்
- எல்லோரையும்
கேட்டதாக கூறிநீங்களே பொறுக்கவில்லை எங்களுக்கு
சித்தியோடு சித்தப்பாவை இனி எப்போ நாம் காண்போம்

அன்பாய் அரவணைக்க உங்கள் அன்பை
தேடுகிறார்கள் எங்கள் பிள்ளைகள்
உங்களுக்காய் யாரைக் காட்டுவோம்
உங்கள் திருமுகத்தை காட்டமாட்டீர்களா!

**பெறாமக்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறப்பிலும் உயிர்வாழ்கிறார்

இறப்புக்குள் ஓர் உயிர்ப் பென்றால் யாரதை நம்புவர்?
இறைமகன் இறந்து உயிர்த்தார்
சாவை வென்ற சத்தியவன்
தோல்வியில் வெற்றி கண்டவர்
இவரையே நாம் நம்புகிறோம் பின் செல்கின்றோம்.
அமரர் யேசுதாசன் யேசுவுக்குள் இறந்துள்ளார்
ஆகவே அவரிலே உயிர்ப்பார் என நம்புகிறோம்

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொண்டவன் இறப்பினும் வாழ்வான்.
இதுவே எம் நம்பிக்கை
இதுவே வாழ்வுதரும்
இயேசுவின் வார்த்தைகள்

**அருட்பணி. நீக்லஸ் அடிகளார்**
**(யாழ் மறைமாவட்டம்)**

## எப்படி மறக்க முடியும்

காலம் சென்ற அருணாசலம் யேசுதாசனின் (ராஜனின்) விண்ணக வாழ்வில் ஒருவருட நிறைவு அண்மித்து வருகின்றபோது அவரை சிறப்பாக நினைப்பதும் அவரது சீரான பண்புகளை எமது மனக்கண் கொண்டு வருவதும் அவரின் இறப்பின் வேதனையின் மத்தியிலும் மகிழ்ச்சியான ஒன்றே மனதிற்கு இதமான ஒன்றே.

நான் 1990 பூநகரி பங்கை பொறுப்பேற்ற சில நாட்களில் குமுழமுனை பாடசாலையின் விளையாட்டுப் போட்டியை கண்டுகளிக்க வென்று அழைக்கப்பட்டிருந்த போது அவரை சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்கள் என்னை மிகுந்த அன்போடும் மகிழ்ச்சியோடும் வரவேற்று உபசரித்தது இன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு ஞாபமாக உள்ளது. அன்று தொட்டு அவரது மரணித்த நாள்வரை என்னை ஒரு சொந்த சகோதரனாக ஏற்று என்னுடன் மிகவும் அன்பாக பழகியதை நான் எப்படி மறக்க முடியும்?

நான் பூநகரி, முழங்காவில் பங்கு குருவாக இருந்த போது எனது பங்கின் வேலைத்திட்டங்களில் அது குமுளமுனை ஆலய வேலை என்றால் என்ன முழங்காவில் ஆலய வேலை என்றாலென்ன அவரும் அவரது மனைவியும் சகோதரர்களும் எனக்கு பூரண ஆதரவு தந்து ஒத்துழைத்ததை நான் எப்படி மறக்க முடியும்?

நான் முழங்காவில் பங்கை விட்டு மாறிச்சென்ற பின்பும் நான் பணியாற்றிய புதிய இடங்களுக்கு தேடி வந்ததை அன்போடு உறவாடியதை நான் எப்படி மறக்க முடியும்.

அவரது குடும்ப வாழ்வின் சுக துக்கங்களில் ஒரு குடும்ப சகோதரனாக எப்போதும் என்னை அழைத்துநின்றதையும் மனம் திறந்து பகிர்ந்ததையும் நான் எப்படி மறக்க முடியும்.

தன் மனைவி பிள்ளைகளுக்காக எந்த தியாகத்தையும் செய்ய தயாராக இருந்ததையும் அதனால் பெரும் சிலுவைகளையும் அனர்த்தங்களையும் அன்றைய கால கட்டத்தில் மகிழ்ச்சியோடு தாங்கி கொண்டதையும் முழுமையாக அறிந்த நான் அவற்றை எப்படி மறக்க முடியும். பிள்ளைகளை படிக்க வைத்து ஓர் உயர் நிலைக்கு அவர்களை கொண்டு செல்வதற்காக எல்லா தியாகங்களையும் செய்த அவரை அவரது குடும்பத்தவர்கள் ஒரு பொழுதுமே மறக்க மாட்டார்கள்.

மற்றவர்களுக்கு எப்போதும் உதவுகின்ற உதவ விரும்புகின்ற மனித ஆளுமையை கொண்டவர் இறுதி நாட்களை வலயன் மடத்தில் கழித்த போதும் மற்றவர்க்கு உதவுகின்ற செயற் பாடுகளில் பங்கேற்றமையையும் நான் எப்படி மறக்க முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னில் வைத்த அன்போ என்னவோ மரணிக்கும் அன்று காலை கூட எனைத்தேடி வந்து எனக்கு சில பொருட்களை பரிசாக தந்து அளவளாவி கதைத்து விட்டு சிரித்த முகத்தோடு சென்றதை நான் எப்படி மறக்க முடியும்.

கொடுமையான செயற்பாடுகளினால் அன்பு நிறைந்த ஒரு நல்ல மனிதன் - எனது மிகவும் அன்புக்குரிய நண்பன் அநியாயமாக கொல்லப்பட்டதை நான் எப்படி மறக்க முடியும். ஏற்க முடியும்.

அவர் மரணித்த செய்தி கேட்டு அதிர்ந்து போன நான் இன்றும் அவரது இழப்பை ஏற்க முடியாத ஒருவனாகவே உள்ளேன். அவரது மனைவி, பிள்ளைகள், மருமகன் சகோதரங்களுக்கு அவரை தங்கள் ஊனக் கண்களால் காண முடியாது இருப்பது வேதனைதான். ஆயினும் விசுவாசத்தின் கண்களினால் அவர் எங்கள் மத்தில் மிகுந்த அன்போடும் இருப்பதையும் எங்களோடு உறவாடுவதையும் நாங்கள் காண முடியும் இறைவன் சன்னி தானத்தில் தனது குடும்பத்தவர் களுக்கும் அன்பர்களுக்கும் ஊரவர்களுக்கும் மன்றாடும் ஒருவரை நாம் மகிழ்ச்சியோடுகாண முடியும் ஏனெனில் அவர் அன்புத் தந்தையாம் இறைவனோடு இருக்கின்றார்.

**இப்படிக்கு**
**அன்பின் சகோதரன்**
**அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர்**
**(யாழ் மறைமாவட்டம்)**

**"உயிரோடு இருக்கும் போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்"**

**"என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன் நினைவாக............

பெற்றோருக்க ராசன் கடைக்குட்டி இளைய மகன்
உற்றார் உறவு வார்த்தைகளில் ராசண்ணன்
பெரியவனான பின் றாகினி புடவையக முதலாளி
உடன் பிறப்புக்கோர் உற்ற துணை
ஊரார் முன்னேற்றத்தில் உடன் உழைப்பாளி

கற்றோர் மத்தியில் கண்ணியவான் ராசன்
கட்டிய மனைவிக்கு கனிவான கணவன்
சீராகப் பிள்ளைகளை பெற்றெடுத்து சிறப்புறு அப்பா
ஆலய வேலைகளில் ஆண்டவனின் ஊழியன்
ஆ இனங்களுக்கு ஆதரவான ஆயன்.

வயலுக்கு நீர் இறைக்கும் போது விவசாயி
சிறுவர்களைக்கண்டு விட்டால் சிரித்து விளையாடி
சின்னஞ்சிறு குழந்தையாக மாறிவிடும் ராசன்
அருட்தந்தையர்க்கு அன்பான தோழன்
என்றென்றும் அவர் நாம் நிலைக்க வேண்டி

அருட்பணி பொன்சியன்
அ.ம.தி
அடிகளார்
திருகோணமலை.

## ஓராண்டு நினைவலைகள்

எதையும் தாங்கும் இதயம் தான் உன்னிடத்தில்
நான் கண்டேன்
ஆலயப்பணி ஆனாலென்ன, சமூகப்பணி ஆனாலென்ன
குடும்பத்தோடு சேர்ந்துழைப்பீர்
நலம் கூறும் வார்த்தைக்கு மதிப்பளித்து மறுவார்த்தை கூறாது
நல்லுள்ளம் கொண்டவர் நீர்

நல்கல்வி உம் பிள்ளைகள் பெற்றிடவே - நீர்
நாள்தோறும் பெற்றிடுவீர் ஆலோசனை பல எம்மிடமே சோதரரே
அவர்கள் நிலை உயருதையா சோதரரே
நீரில்லை மகிழ்ந்து கொள்ள.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்துயர் செய்தி கேட்டு அதிர்ந்துபோனேன்
உயர்வான நல்லவரை இழந்தோமேன!
ஆண்றோடி மனறற்தான் - ஆனாலும்
தெரியவில்லை உம்நினைவு எம்மோடு

இவரின் நினைவாக வேதனை யடையும் அக்கா, பிள்ளைகள், மருமகனிற்கு ஆறுதலையும், அவரின் ஆன்ம சாந்திக்காக தினம் இறைவனை வேண்டுகிறேன்.

**அன்புச் சகோதரன்**
**அருட்பணி. பாஸ்கரன் அடிகளார்**
**(கனடா)**

## நண்பர்கள் மனக்கவலை

எமதருமை நண்பனே எமை யெல்லாம்
தவிக்க விட்டு சென்ற வழி அறியோம்
ஒரு முறையாவது உங்களை உயிருடன்
பார்க்க ஆசையாக வுள்ளது மீண்டு வருவீர்களா

பார் போற்றும் பண்பாளனாய்
ஊர் போற்றும் உத்தமனாய்
வாழ்ந்து விட்டு எமையெல்லாம்
ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு
மீளாத்துயில் கொண்டதேனோ.

**நண்பர்கள்**
**அருட்பணி செபநேசன் அடிகளார்**
**அருட்பணி எமில்போல் அடிகளார்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுழமுனை பல்லவராயன் கட்டு அமரர் அருணாசலம் யேசுதாசன் அவர்களின்

# வம்சாவழி

☆ அமரர்கள்

- ☆அருணாசலம் + ☆அன்னம்மா
  - பொன்னுதுரை
  - அந்தோனியப்பு
  - ☆யேசுதாசன்
  - வில்லியம்மா
  - இருதயநாயகி
  - விக்றோறியா

- இம்மானுவேல் + பத்திலோமை
  - கருணைநாயகி
  - பத்மசேனன்
  - வரவணிக்கா
  - றோசம்மா
  - அமலதாஸ்
  - வின்சன்
  - பவுன்
  - டென்சி
  - யமுனா
  - ஜெறட்
  - ஜென்சி

- யேசுதாசன் + வரவணிக்கா
  - சந்திரிக்கா + பிரபாகரன்
  - ஜெகதாஸ்
  - றாகினி
  - லொசிங்ரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இறைவா என் இறைவா

என் இறைவா, என் இறைவா
ஏன் என்னைக் கை நெகிழ்ந்தீர்
என்னைப் பார்ப்போர் எல்லோரும்
என்னை, ஏளனம் செய்கின்றனர்
உதட்டைப் பிதுக்கி
தலையை அசைக்கின்றனர்
ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்தானே
அவர் மீட்கட்டும்,
அவருக்கு இவன்மீது பிரியமிருந்தால்
இவனை விடுவிக்கட்டும் என்றார்கள்

ஏனெனில் பல நாய்கள் என்னைச்
சூழ்ந்து கொண்டன
பொல்லாதவர்கள் கூட்டம்
என்னை, வளைத்துக் கொண்டது
என் கைகளையும், கால்களையும் துளைத்தார்கள்
என் எலும்புகளையெல்லாம்
நான் எண்ணிவிட முடியும்
அவர்களோ என்னை பார்க்கிறார்கள்
பார்த்து, அக்களிக்கிறார்கள்.
என் ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து
கொள்கிறார்கள்

என் உடைமீது சீட்டுப் போடுகிறார்கள்
ஆனால் நீரோ ஆண்டவரே
என்னை விட்டுத் தொலைவில் போய் விடாதேயும்
எனக்குத் துணையான நீர் எனக்கு
உதவிபுரிய விரைந்து வாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நெகிழ்த்தி
# நன்றி நவில்கின்றோம்


"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய் நன்றி கொன்ற மகற்கு"

எம் மனையின் கலங்கரைவிளக்காய் திகழ்ந்து எமை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொள்ளும் எம் தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் நின்றும் முத்திலிங்கம் ராசாத்தி விஞ்சித்தம்பி மகிழ்ம்மா குடும்பத் தவர்க்கும் உடனிருந்து உதவியவர்க்கும் அருட்தந்தைக்கும் அருட் சகோதரர்கட்கும் அருட்சகோதரி கட்கும். நேரில் வந்தும் தொலைபேசி வழியாயும் ஆன்மஈடேற்ற பூசைகளில் கலந்து கொண்டும். தொலைபேசி வழியே வெளி நாட்டிலிருந்து உள்நாட்டி லிருந்தும் ஆறுதல் மொழி பேசிய உறவுகட்கும் இன்ரநெற் மூலம் செய்தியை அறிவித்த சீரான் வசந்தி குடும்பத்தினர்க்கும் கல்வியற் கல்லூரி பிடாதிபதி (போனட் ஐயா அவர்கட்கும்) உற்றார் உறவினர் நண்பர்கள் ஆசிரிய தோழர்கள் அனைவர்க்கும் மற்றும் பல வழிகளிலும் உதவியவர்கும் இந்த நினைவு மலரினை அழகான கணணி மூலம் வடிவமைத்து அச்சிட்ட ஆதவன் அச்சக உரிமையாளர் அவர்கட்கும் எம் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து நிற்கின்றோம்.
தங்களது தோழமையை ஆறாத்துயரிலும் நன்றியுடன் நினைவுகூறும்.

**இங்ஙனம்**
**பாசமிகு அன்பு மனைவி,**
**பிள்ளைகள், மருமக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணனி அச்சுப்பதிப்பு : sps ஆதவன் அச்சகம்

இல.92C, மில் றோட், வவுனியா.

தொலைபேசி இல: 024-4924004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உயிர்ப்பும் உயிரும் நானே - என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"



ஆதவன் அச்சகம் மில் வீதி, வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org